**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.57/2021 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.11 |
| பெயர் | கருப்பசாமி | கிராமம் | |
| தந்தை பெயர் | குமாரசாமி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 09.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.09.2020 தேதியில் மாலை 5.45 மணியளவில் புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 ஆக இருந்தபோது புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண்.1327/2020 இதசபிரிவுகள் 304 ஏ பிரிவின் படியான வழக்கில் சம்மந்தபட்ட TN 55 R 2782 என்ற பதிவெண் கொண்ட கனரக அசோக் லைலேண்ட் டிப்பர் லாரியை ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தில் சேதம் எதுவும் காணப்படவில்லை. அதன் கால் தடைதிறன் 66 சதவீதமாக இருந்தது. கைத்தடைதிறன் செயல்படும் நிலையிலும் இருந்தது. ஸ்டியரிங் மற்றும் டயர்கள் நல்ல நிலையில் இருந்தது. இந்த வாகன விபத்து மேற்படி வாகனத்தின் இயந்திர கோளாறினால் ஏற்பட்டிருக்கவில்லை என்ற சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்றிதழ் அ.சா.ஆ6. மேற்படி டிப்பர் லாரி போன்ற கனரக வாகனம் ஒரு நபர் மீது மோதி வயிற்றில் ஏறிஇறங்கினால் டிப்பர் லாரிக்கு சேதம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை என்ற சொன்னால் சரிதான்.

இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Sd/– கருப்பசாமி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.